# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**STC.No.202/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாணிக்கவாசகம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் திருவேகம்பத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 ம் தேதி திருவேகம்பத்தூர் சார்பு ஆய்வாளர் திரு.மோகன் மற்றும் தலைமைக்காவலர் 1645 திரு.கண்ணன் ஆகியோர்கள் அன்றைய பணியாக வாகன தணிக்கை செய்ய மதுரை-தொண்டி தேசிய நெடுஞ்சாலையில் காவாதுகுடி விளக்கு அருகே வாகன தணிக்கை செய்யும்போது TN 63 AR 5011 என்ற pulsar வாகனத்தை வாகன தணிக்கை செய்ய நிறுத்தியபோது அவர்கள் நிறுத்தாமல் செல்ல இருந்தவர்களை பிடித்து விசாரிக்கையில்

முன்னுக்குபின் முரணாக பெயர் மற்றும் முகவரி சொல்ல சார்பு ஆய்வாளர் நிறுத்தியபிறகு இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் சரத்குமார் பின்னால் அமர்ந்திருந்வர் அஜர் வர்மாக எனக் கூறினார்கள். உடனே சார்பு ஆய்வாளர் அவர்கள் உங்கள் மீது சந்தேகமாக இருக்கிறது விசாரணை செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கூற அவர்கள் முன்னுக்குபின்னாக சொல்லவும் உடனே சம்பவ இடத்தில் சோதனை செய்ய மேற்படி இருவரும் சம்மதம் தெரிவித்ததால் அதனை பதிவு செய்ய ஒரு தபால் தயார் செய்து அவர்கள் சோதனை செய்ய ஒப்புக்கொண்டதன்பேரில் சோதனை செய்தபோது அஜய் வர்மா என்பவர் சட்டைப்பாக்கெட்டில் இருந்து சுமார் 4 கிராம் கஞ்சா பொட்டலம் கைப்பற்றப்பட்டது. பிறகு 17.15 மணிக்கு இரு சக்கர வாகனத்தையும் கஞ்சா பொட்லத்தையும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

நாங்கள் சோதனை செய்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். என்னிடம் சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது எதிரிகள் எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி வந்தார்கள் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை விசாரணை செய்வதற்கு முன்பு வேறு யாரையும் விசாரிக்கவோ,

சோதனையிடவோ செய்தோமா என்றால் ஆமாம், அதற்கு முன்பு வேறு நபர்களையும் சோதனை செய்தோம். நாங்கள் சம்மத கடிதத்தை எதிரிகளிடம் வற்புறுத்தி கையெழுத்து பெற்றோம் என்றால் சரியல்ல. சம்மத கடிதம் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நாங்கள் எடை போடும் இயந்திரம் எடுத்துச் செல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கஞ்சா எடுத்து செல்வதாக எங்களுக்க சோதனையிடுவதற்கு முன்பாக ஏதேனும் தகவல் வந்ததா என்றால் இல்லை. 1ம் எதிரி கஞ்சாவை யாரிடம் இருந்து வாங்கி விற்பனைக்காக கொண்டு போகிறார் என்று விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம், எதிரி யாரிடம் இருந்து வாங்கினார் என்று பெயர் குறிப்பிடவில்லை. 1ம் எதிரி எந்த கஞ்சாவையும் எடுத்துச் செல்லவில்லை என்றும் அவர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கஞ்சாவை கைப்பற்றியதாக சொல்லப்படும் சமயத்தில் அ.சா.1ம் உடன் இருந்தாரா என்றால் ஆமாம். கஞ்சாவை காவல் நிலையத்தில் வைத்து எடை போட்டு பார்த்தோம். வேறு வழக்கில் கைப்பற்றி வைத்திருந்த கஞ்சாவை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.